உ

கணபதிதுணை.

# நீதிவெண்பா

மூலமும்

காஞ்சிபுரம்-வித்வான்

**சபாபதிமுதலியாரவர்கள்**

எளியநடையாககருத்துத்தோன்ற

எழுதியஉரையும்

இயற்றமிழாசிரியர்

அஷ்டாவதானம்.

வீராசாமிசெட்டியார் மருகர்

**அப்பன்செட்டியாரவர்களால்**

பரிசோதிக்கப்பட்டு


தஞ்சைமாநகரம்

கோவிந்தாச்சாரியாரவர்களால்

தமது

திருவருட்பிரகாசஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

விக்கிரம௵ பங்குனி மீ.

1880

உ

சிவமயம்.

# நீதிவெண்பா.

மூலமும் - உரையும்.

காப்பு-வெண்பா.

மூதுணர்ந்தோரோதுசில மூதுரையைப்பேதையேன்
நீதிவெண்பாவாக நிகழ்த்தினே - னாதிபரன்
வாமாங்கருணை மணியுதரம்பூத்தமுதற்
கோமான்பெருங்கருணை கொண்டு.

(இதன்பொருள்)

பெரியோர்கள் சொல்லியிருக்கிற நீதிவாக்கியங்களில் சிலவற்றை அறிவில்லாதவனாகிய யானும் பரமசிவனுடைய இடதுபாகத்திலிருக்கும் பராசத்தி யீன்றருளிய விநாயகமூர்த்தியின் கிருபையினாலே வெண்பாவாகச் சொன்னேன் - என்றவாறு.

## நூல்.

தாமரைபொன்முத்து சவரங்கோரோசனைபால்
பூமருதேன்பட்டு புனுகுசவ்வா - தாமழன்மற்
றெங்கேபிறந்தாலு மெள்ளாரோநல்லோர்க
ளெங்கேபிறந்தாலு மென்.

(இ - ள்) தாமரை - பொன் - முத்து - சாமரை - கோரோசனம்-பால்-தேன் - பட்டு - புனுகு - சவ்வாது - நெருப்பு இவைகள் இழிவான இடங்களில் - உண்டானவைகளா யிருந்தாலும் யாவராலும் சிறப்பாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, (அதுபோல) பெரியோர்கள்எந்தக்குலத்திலே பிறந்தாலும் யாவராலும் மேன்மையாக ஏற்றுக்கொள்ளப் படுவார்கள்-எ-று. (க)

அரிமந்திரம்புகுந்தா லானைமருப்பும்
பெருகொளிசேர் முத்தும்பெறலாம்-நரிநுழையில்
வாலுஞ்சிறிய மயிரொலும்புங்கத்தபத்தின்
தோலுமல்லால்வேறுமுண்டோசொல்.

(இ - ள்) சிங்கமிருக்குங்குகையிற்போனால் யானைத்தந்தங்களையும் முத்துகளையும், அடையலாம். நரியிருக்குமிடத்திற்போனால் கழுதைத்தோலையும் மயிரையும், எலும்பையும், அடையலாம். (அவைபோல) பெரியோர்களிருக்குமிடத்திற்போனால் மேலானபொருளை யடையலாம். மூடர்களிருக்குமிடத்திற்போனால், இழிவானபொருளையடையலாம்-எ-று. (௨)

அறிவன்பகையேனு மன்புசேர்நட்பாஞ்
சிறுவன்பகையாஞ் செறிந்த - வறிவுடைய
வென்றிவனசரன்றான் வேதியனைக்காத்தான்முன்
கொன்றதொருவேந்தைக் குரங்கு.

(இ - ள்) அறிவுள்ளவனைப் பகைத்தால் நட்பே பாராட்டுவன்-மூடனைச் சிநேகித்தால் விரோதமே பாராட்டுவன் - அறிவுடைய வேடன் ஒருபிராமணனைக்காத்தான். ஒருகுரங்கு ஒரு அரசனைக் கொன்றது-எ-று. (வரலாறு) ஒரு அரசன் ஒரு பிராமணனுக்கு ஒருமாணிக்கங்கொடுத்து நீபோகிறவழியில் திருடர்களிருப்பார்களாகையால்அதைவிழுங்கிஉன்ஊரிலேபோய்க் கக்கிஎடுத்துக்கொள்ளென்று சொன்னான் அதையறிந்த ஒருவேடன் பிராமணனைத் தொடர்ந்துபோய்க் காட்டில் வளைத்துக்கொண்டு உன்வயிற்றிலிருக்கும் மாணிக்கத்தைத் தாவென்று பயமுறுத்தினான்,அந்தப்பிராமணன் என்வயிற்றிலில்லை உன்வயிற்றிலேதானிருக்கின்றதென்றுசொல்ல;இப்படிஇவர்களிருவரும் வழக்கிட்டுக் கொண்டிருக்கும்போது வந்தசிலதிருடர்கள் அவ்விருவர்வயிற்றையுங் கீறிப்பார்க்க எத்தனிக்கையில் பிராமணனிறக்கும்படி நேரிட்டதென்று வேடன் மனதிரங்கி நாங்களிருவரும் விளையாட்டாகப் பேசினோமேயல்லாமல் நிசமல்ல, உங்களுக்குச் சந்தேகந்தோன்றுமாகில் முன்னே என்வயிற்றைச்சோதித்து மாணிக்கமிருந்தால் பின்பு பிராமணன் வயிற்றையுங் கீறிப்பாருங்களென்று சொல்ல. அப்படியேசோதித்து இல்லாமையினாலே பிராமணனைவிட்டு விட்டார்கள். ஒருராஜன் தான்வளர்த்த குரங்கின்கையில் வாளைக்கொடுத்து இவ்விடத்திலொருவரையும் வரவொட்டாமல் காத்திருவென்று சொல்லி நித்திரைபோகையில் அரசன்மேல் ஒரு ஈ வந்தேறக்கண்டு குரங்கு அதைவெட்ட அந்தஇராஜன்இரண்டுதுண்டமாயிறந்துபோனான். (௩)

மென்மதுரவாக்கால் விரும்புஞ்சகங்கடின
வன்மொழியினாலிகழு மன்னுலக - நன்மொழிசேர்
ஓதுகுயிலேதங் குதவியதுகத்தபந்தான்
ஏதபராதஞ்செய்த தின்று.

(இ-ள்.) இனிமையான வசனம் வசனித்தால் இவ்வுலகத்தார் விருப்பமுற்றுப் புகழ்வார்கள் வன்மையானவசனம் வசனித்தால் வெறுப்புற்றிகழ்வார்கள், குயில்கூவினால் யாவரும் விருப்பமாய்க் கேட்பார்கள், கழுதைகூவினால் வெறுப்படைவார்கள், யாவரும் விருப்புறும்படி குயில் உதவிசெய்ததுமில்லை வெறுப்புறும்படி கழுதை குற்றஞ்செய்ததுமில்லை-எ-று. (௪)

பகைசேருமெண்ணான்கு பற்கொண்டேநன்று
வகைசேர்சுவையருந்து மாபோல் - தொகைசேர்
பகைவரிடமெய்யன்பு பாவித்தவராற்
சுகமுறுதனல்லோர் தொழில்.

(இ-ள்.) பகையாகிய முப்பத்திரண்டு பற்களைக்கொண்டு நாவானது பலசுவைகளை உண்டறியும், [அதுபோல] நல்லோர்கள் பகைவரிடத்தில் அன்புள்ளதாகவே பாவித்து அவர்களால் சுகத்தையடைவார்கள்-எ-று. ()

காந்தனில்லாத கனங்குழலாள்பொற்பவமாஞ்
சாந்தகுணமில்லார் தவமவமா - மேந்திழையீ
ரன்னையில்லாப்பிள்ளை யிருப்பதவமவமே
துன்னெயிறில்லாருண் சுவை.

(இ-ள்.) கணவனில்லாத மனைவியினழகும், சாந்தகுணமில்லாதார் தவமும், தாயில்லாத பிள்ளைகளிருப்பதும், பற்களில்லாதார்உண்ணும்உணவின் சுவையும் வீணாகும்-எ-று. (௬)

வருத்தவளைவேயரசர் மாமுடியின்மேலாம்
வருத்தவளையாத மூங்கில் - தரித்திரமாய்
வேழம்பர்கைப்புகுந்து மேதினியெல்லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த்தான்.

(இ-ள்.) இளமையில் வருத்தமுற்று வளைக்கப்பட்ட மூங்கில் மன்னவர்களுடைய முடிக்கு மேலாகவிருக்கும் அப்படி வளைக்கப்படாதமூங்கில் கழைக்கூத்தர்காலின் கீழாகவிருக்கும் [அதுபோல] இளமையில் வருத்தமுற்று கல்வி கற்றுணர்ந்தவர்கள் யாவருக்கும் மேலாயிருப்பார்கள், அப்படிக் கல்லாதார் தரித்திரராய்த்தாழ்வடைவார்கள்-எ-று. (௭)

நொய்தாந்திரணத்தி னொய்தாகும்வெண்பஞ்சு
நொய்தாமிரப்போ னுவலுங்கால் - நொய்யசிறு
பஞ்சுதனினொய்யானைப் பற்றாதோகாற்றணுக
வஞ்சுமவன்கேட்ப தறிந்து.

(இ-ள்.) அற்பமாகிய துரும்பைப்பார்க்கிலும் பஞ்சு அற்பமாயிருக்கும், இரப்போனந்தப் பஞ்சிலும் அற்பமாவன். அப்படியானால், அந்தப்பஞ்சையடித்துக்கொண்டுபோகின்ற காற்று அவனை அடித்துக்கொண்டு போகாதோவெனில் என்னகேட்பானோவென்று அவனிடத்திற்போகப்பயப்படும்-என்றவாறு. (௮)

ஒருபோதுயோகியே யொண்டளிர்க்கைமாதே
யிருபோதுபோகியே யென்ப - திரிபோது

ரோகியேநான்குபோ துண்பானுடல்விட்டுப்
போகியேயென்று புகல்.

(இ-ள்.) ஒருபொழுதுஉண்பவன்யோகி, இருபொழுதுஉண்பவன் போகி, மூன்றுபொழுது உண்பவன் ரோகி, நான்குபொழுது உண்பவன் இறந்தவனே-எ-று. (௯)

கண்ணிரண்டேயாவர்க்குங் கற்றோர்க்குமூன்றுவிழி
யெண்ணும்விழியேழாகு மீவோர்க்கு - நண்ணும்
அனந்தந்தவத்தா லருள்ஞானம்பெற்றோர்க்
கனந்தம்விழி யென்றறி.

(இ-ள்.) யாவருக்கு மிரண்டுகண்களேயாகிலுங் கற்றவர்களுக்கு கல்வியாகிய கண்ணுடன் மூன்றுகண்களாம், கொடுக்குங்கைவிரல் நகக்கண்களைந்தோடு கொடையாளிகளுக்கு ஏழுகண்களாம், தவத்தால் எல்லாப்பொருளையு மறியுந்தன்மை யிருக்கின்றமையால் ஞானிகட்கு அனந்தங்கண்களாம்-எ-று. நகக்கண்களை மற்றக்கண்களோடு சேர்த்துக்கூறியது, ஈகையின் பெருமைதோன்ற வென்க. (௰)

உற்றபெருஞ்சுற்ற மொழியாமனைவியுடன்
பற்றிமிகவாழ்க பசுவின்வால் - பற்றி
நதிகடத்தலன்றியே நாயின்வால்பற்றி
நதிகடத்தலுண்டோ நவில்.

(இ-ள்.) பந்துக்களைவிட்டுநீங்காமல் மனைவியுடன் இல்வாழ்க்கையில் வாழ்ந்தால் கதிபெறலாம் பரத்தையருடன்கூடி வாழ்ந்தால் கதியடையக்கூடாது [அது எப்படியெனில்] பசுவின்வாலைப்பிடித்துக்கொண்டு ஆற்றி லிறங்கினால் கரையேறலாமேயன்றி நாயின்வாலைப்பிடித்துக்கொண்டு கரையேறக்கூடாது அதுபோல-எ-று. (௰௧)

ஆசைக்கடியா னகிலலோகத்தினுக்கு
மாசற்றநல்லடியா னாவானே-யாசை
தனையடிமைகொண்டவனே தப்பாதுலகந்
தனையடிமைகொண்டவனே தான்.

(இ-ள்) ஐம்புலனுகர்ச்சியில் இச்சையுள்ளவ னுலகத்தாருக்கு அடிமையாவன் அவ்விச்சையில்லாதவன் உலகத்தாரையெல்லாந் தனக்கடிமையாக்கிக்கொள்ளுவன்-எ-று. (௰௨)

ஆனந்தணர்மகளி ரன்பாங்குழந்தைவதை
மானந்தரும்பிசி வார்த்தையிவை-மேனிநாயே

கூறவருபாவங் குறையாதோவ்வொன்றுக்கு
நூறதிகமென்றே நுவல்.

(இ-ள்.) ஒருபிராமணனைக்கொன்றால் நூறு பசுக்களைக்கொன்றபாவமாம், ஒருஸ்திரீயைக்கொன்றால் நூறுபிராமணர்களைக் கொன்றபாவமாம், ஒருகுழந்தையைக்கொன்றால் நூறுஸ்திரீகளைக்கொன்றபாவமாம், ஒருபொய் சொன்னால் நூறுகுழந்தைகளைக்கொன்றபாவமாம்-எ-று. (௰௩)

பெற்றமையுமென்னாப் பெரியோரும்பெற்றபொருள்
மற்றமையுமென்றெ மகிழ்வேந்து-முற்றியநன்
மானமில்லாவில்லாளு மானமுறுவேசியரு
மீனமுறுவா ரிவர்.

(இ-ள்.)கிடைத்தபொருள்போதுமென்று மகிழ்ச்சியடையாதபெரியோர்களும் கிடைத்தபொருள் போதுமென்று மகிழ்ச்சியடைகின்றவேந்தனும் நாணமில்லாத மனைவியும் நாணமுள்ள விலைமாதரும் குறைவையடைவார்கள்-எ-று. (௰௪)

கற்றோர்கனமறிவர் கற்றோரோகற்றறியா
மற்றோரறியார் வருத்தமுறப்-பெற்றறியா
வந்திபரிவாய் மகவைப்பெறுந்துயரம்
நொந்தறிகுவாளோ நுவல்.

(இ-ள்) கல்விகற்றவர்களது பெருமையை (அவர்போல்) கல்விகற்றவர்களறிவார்களேயன்றிக்கல்லாதமூடர்களறியார்கள் (அஃதெப்படியெனில்) பிள்ளையைப்பெறுகிறவருத்தம் பெற்றவளறிவாளேயன்றிப் பெறாதமலடியறியாள் அதுபோல-எ-று. (௰௫)

செய்யிலொருகருமந் தேர்ந்துபுரிவதன்றிச்
செய்யின்மனத்தாபஞ் சேருமே-செய்யவொரு
நற்குடியைக்காத்த நகுலனைமுன்கொன்றமறைப்
பொற்கொடியைச்சேர் துயரம் போல்.

(இ-ள்) ஒரு காரியத்தை ஆலோசியாமல் செய்கிறவர்களுக்குத் தான்வளர்த்த கீரியைக்கொன்ற பிராமணஸ்திரீக்குத் துயரம்நேரிட்டதுபோலமனவருத்தம் நேரிடும்-எ-று. [வரலாறு] ஒருபிராமணஸ்திரீ புத்திரவாஞ்சையால் ஒரு கீரிப்பிள்ளையை வளர்க்கும்போது ஒரு குழந்தைபிறந்து வளரவதைத் தொட்டிலில் வளர்த்திவிட்டு ஸ்நானஞ்செய்யப்போனாள், அப்பொழுது தொட்டிலின் கயிற்றுவழியா யிறங்கிவருகிற பாம்பைக் கீரிப்பிள்ளைகண்டு துண்டுதுண்டாகக் கடித்துவிட்டுப் பிராமணஸ்திரீக்குச் சொல்லப்போகையில் உதிரந்தோய்ந்தவாயுடன் வருகிறகீரியை அவள்கண்டு குழந்தையைக் கடித்துப்போட்டு வருகிறதாகநினைத்து அந்தக் கீரியைக்கொன்று

விட்டு வீட்டில்வந்து தொட்டிலில் தூங்குகிற குழந்தையையும் பாம்புதுண்டத்தையும் பார்த்து ஓ!ஓ! நாம் ஆலோசியாமல் கீரியைக்கொன்றோமேயென்று மிகுந்த துயரத்துடன் குழந்தையுந்தானுமாய்க் கிணற்றில் விழுந்திறந்தாள் பின்புவந்த அவள்புருஷனும் அப்படியேயிறந்தான். (௰௬)

நாவினுனியி னயமிருக்கிற்பூமாது
நாவினியநல்லோரு நண்ணுவார்-நாவினுனி
யாங்கடினமாகி லத்திருவுஞ்சேராள்முன்
னுங்கேவருமரண மாம்.

(இ-ள்.) இன்சொலுடையானிடத்துப் பூமகளும் நல்லவர்களும் இருப்பார்கள் வன்சொலுடையானிடத்து அப்பூமகளும் நல்லோர்களுஞ் சேரார்கள் அவனுக்கு மரணமுநேரிடும். (௰௭)

ஈக்குவிடந்தலையி லெய்துமிருந்தேளுக்கு
வாய்த்தவிடங்கொடுக்கில் வாழுமே-நோக்கரிய
பைங்கணரவுக்குவிடம் பல்லளவேதுர்ச்சனருக்
கங்கமுழுதும்விடமே யாம்.

(இ-ள்.) ஈக்குவிஷம் தலையிலும், தேளுக்குவிஷம் கொடுக்கிலும், பாம்புக்குவிஷம் பல்லிலுமிருக்கும், துர்ச்சனருக்கு உடல்முழுதும் விஷமிருக்கும் என்றவாறு. (௰௮)

துர்ச்சனரும்பாம்புந் துலையொக்கினும்பாம்பு
துர்ச்சனரையொக்குமோ தோகையீர்-துர்ச்சனர்தா
மெந்தவிதத்தாலு மிணங்காரேபாம்புமணி
மந்திரத்தாலாமேவசம்.

(இ - ள்) துர்ச்சனரும்பாம்பும் செய்கையில் ஒத்திருந்தாலும் பாம்பு துர்ச்சனரையொவ்வாது (ஏனெனில்) துர்ச்சனர் எந்தவிதத்தாலும் வசப்படார்கள் பாம்புமணிமந்திரங்களால் வசமாம்-எ-று. (௰௯)

கொம்புளதற்கைந்து குதிரைக்குப்பத்துமுழம்
வெம்புகரிக்காயிரந்தான் வேண்டுமே - வம்புசெறி
தீங்கினர்தங்கண்ணிற் றெரியாததூரத்து
நீங்குவதேநல்லநெறி.

(இ - ள்) கொம்புள்ள மிருகங்களுக்கு ஐந்துமுழதூரமும் குதிரைக்குப் பத்துமுழதூரமும், யானைக்கு ஆயிரமுழதூரமும் விலகிப்போகவேண்டும், துர்சனர்களைக்கண்டால் அவர்கள் கண்களுக்குத் தெரியாததூரத்திலே விலகிப்போவதே நல்லநெறியாம்.-எ-று. (௨௰)

அவ்வியநெஞ்சத் தறிவிலாத்துர்ச்சனரைச்
செவ்வியராக்குஞ் செயலுண்டோ - திவ்வியநற்
கந்தம்பலவுங் கலந்தாலுமுள்ளியது
கந்தங்கெடுமோ கரை.

(இ-ள்) பொறாமையும் மூடத்தனமுமுள்ள துர்ச்சனரையோக்கியராக்கும் வகையுண்டோவெனில் இல்லை (அஃதெப்படியெனில்) பலவகையாகியதிவ்வியவாசனைப் பண்டங்களைக்கலந்தாலும் வெண்காயத்தினது நாற்றமாறாது அதுபோல-எ-று. (உக)

துன்னுமிருமலுந் துர்ச்சனருமொக்குமோ
மன்னுமிருமனேய் மாறுங் - யென்னே
கடுவுங்கடுநேர் கடுமொழியுங்கண்டால்
கடுகவசமாகையால்.

(இ - ள்) இருமனேயும் துர்ச்சனருமொப்பல்ல (ஏனெனில்) இருமனேய் கடுக்காயால்நீங்கும், துர்ச்சனர் கடினவசனத்தோடு கண்டித்தால் வசமாவார்களாகையால்-எ-று, (உஉ)

செங்கமலப்போதலர்ந்த செவ்விபோலும்வதனந்
தங்குமொழிசந்தனம்போலும்-பங்கியெறி
கத்தரியைப்போலுமிளங் காரிகைபிர்வஞ்சமனக்
குத்திரர்பால்மூன்று குணம்.

[இ-ள்.] வஞ்சகருக்கு முகம் தாமரைமலர்போலப் பொலிவாயிருக்கும் வசனம் சந்தனம்போலக் குளிர்ச்சியாயிருக்கும், மனம் மயிர்கத்திரிக்கிற கத்திரியைப்போலக் கொடிதாயிருக்கும்-எ-று. [உங]

நீசனேநீச னினையுங்காற்சொற்றவறும்
நீசனேநீச னவனேயே-நீசப்
புலையனுமென்றுரைக்கும் புல்லியனேமேலாம்
புலையனுமென்றே புகல்.

[இ-ள்.] நீசனேநீசன் சொன்னசொற் றவறுகிறவனே யிழிவானநீசன் ஆகையால் நீசனே இழிவான புலையனென்றுசொல்லுகிறவனே இழிவான புலையன்-எ-று. [உச]

ஞானமாசாரம் நயவாரிடைப்புகழு
மேனைநால்வேதமிருக்குநெறி-தான்மொழியிற்

பாவநிறைசண்டாளர் பாண்டத்துக்கங்கைநீர்
மேவுநெறியென்றே விடு.

[இ-ள்.] ஞானமும் ஆசாரமும் இல்லாதவர்களிடத்து நான்குவேதமுமிருப்பது சண்டாளர்பாத்திரத்திலே கங்கைநீரிருப்பதுபோலாம்-எ-று. [உரு]

குணநன்குணராக் கொடியோரிடத்துக்
குணநன்குடையார் குறுகார்-குணமுடைமை
நண்ணச்சமண நகரத்திற்றுசொழிக்கும்
வண்ணானுக்குண்டோ வழக்கு.

[இ-ள்.] நல்லகுணமில்லாத துர்ச்சனரிடத்து நற்குணமுடைய சற்சனர்கள் போகார்கள். [அஃதெப்படியெனில்] நிருவாணிகளாகிய சமணர்களிருக்கும் நகரத்தில் வண்ணான் போகவேண்டிய காரியமில்லை அதுபோல-என்றவாறு. [உசு]

ஆனைமருப்பு மருங்கவரிமான்மயிருங்
கானவரியுகிருங் கற்றோரும்-மானே
பிறந்தவிடத்தன்றிப் பிறிதொருதேசத்தே
சிறந்தவிடத்தன்றே சிறப்பு.

[இ-ள்.] ஆனைத்தந்தமும் கவரிமான் மயிரும் புலிநகமும் கல்விகற்றவர்களும் பிறந்தவிடத்திலல்லாமல் வேறொருதேசத்திற்போனாலும்நல்லசார்பையடைந்தாலே பெருமைகிடைக்கும்-எ-று. [உஎ]

தலைமயிருங்கூருகிரும் வெண்பல்லுந்தந்த
நிலையுடைய மானவருநிற்கு-நிலைதவறுந்
தானத்திற்பூச்சியமே சாருநிலைதவறுந்
தானத்திற்பூச்சியமே தான்.

[இ-ள்.] தலைமயிரும் நகங்களும் பற்களும் மானமுடையவர்களும் இருக்கும் இடத்திலிருந்தால் மேன்மையே யல்லாமல் இருக்குமிடத்தைவிட்டால் மேன்மையில்லை-எ-று. [உஅ]

வென்றிவரியுகிரும் வெண்கவரிமான்மயிருந்
துன்றுமதயானைச் சுடர்மருப்பு-நின்றநிலை
வேறுபடினுஞ்சிறப்பா மெய்ஞ்ஞானிநின்றநிலை
வேறுபடினுஞ் சிறப்பாமே.

[இ-ள்.] புலிநகம் கவரிமான்மயிர் யானைத்தந்தம் இவையெல்லாம் இருக்கும் இடத்தைவிட்டு நீங்கினாலுஞ்சிறப்பையடையும் [அதுபோல] மெய்ஞ்

ஞானிகள் தங்களிருப்பிடத்தைவிட்டு நீங்கினாலும் சிறப்பையடைவார்கள் என்றவாறு. [௨௯]

அன்னைதயையு மடியாள்பணியுமலர்ப்
பொன்னினழகும் புவிப்பொறையும்-வன்னமுலை
வேசிதுயிலும் விறன்மந்திரிமதியும்
பேசிலிவையுடையாள் பெண்.

[இ-ள்.] அன்பில் தாயைப்போலும் பணிவிடைசெய்வதில் அடியாளைப்போலும் அழகில் பூமகளைப்போலும் பொறுமையில் பூமியைப்போலும் போகத்தில் வேசியைப்போலும் புத்தியில் மந்திரியைப்போலும் இருப்பவளே நல்லமனைவியாவள்-எ-று. [௩௰]

பெண்ணொருத்திபேசில் பெரும்பூமிதானதிரும்
பெண்ணிருவர்பேசில் விழும்வான்மீன்கள்-பெண்மூவர்
பேசிலலைசுவறும் பேதையேயெல்பலர்தாம்
பேசிலுலகென்னுமோ பின்.

[இ-ள்.] ஒருஸ்திரீபேசினால் பூமியதிரும், இரண்டுஸ்திரீகள்பேசினால் நட்சத்திரங்களுதிரும், மூன்றுஸ்திரீகள்பேசினால் சமுத்திரசலம் வற்றிப்போம் பலஸ்திரீகள்பேசினால் உலகம் என்னபாடுபடுமோ தெரியாது-எ-று. [௩௧]

என்னேகிரேதத் திரேணுகையேகூற்றவனாந்
தன்னேர்திரேதத்திற் சானகியே-பின்யுகத்திற்
கூடுந்துரோபதையே கூற்றாங்கலியுகத்தில்
வீடுதொறுங்கூற்றுவனாமே.

[இ-ள்.] கிரேதாயுகத்தில் ரேணுகை நமன்போலிருந்தாள் திரேதாயுகத்தில் சீதை நமன்போலிருந்தாள், துவாபரயுகத்தில் துரோபதைநமன்போலிருந்தாள், கலியுகத்தில் வீடுகள்தோறு மிருக்குமாதர்களெல்லாரும் அனந்தம் நமன்போலிருக்கிறார்கள்-எ-று. [௩௨]

கர்ப்பூரம்போலக் கடலுப்பிருந்தாலுங்
கர்ப்பூரமாமோ கடலுப்பு-பொற்பூரும்
புண்ணியரைப்போல விருந்தாலும்புல்லியர்தாம்
புண்ணியராவாரோ புகல்.

[ள்-ள்.] கர்ப்பூரம்போலக் கடலுப்பு வெள்ளையாகவிருந்தாலும் கர்ப்பூரமாகாது. [அதுபோலப்] பாவிகள் உருவத்தில் புண்ணியரைப்போலிருந்தாலும் புண்ணியராகார்கள்-எ-று. [௩௩]

சீலமில்லானேதேனுஞ் செப்பிடினுந்தானக்கக்
காலமிடமறிந்து கட்டுரைத்தே-யேலவே
செப்புமவனுந்தான் சிந்தைநோகாதகன்று
தப்புமவனுத்தமனே தான்.

[இ-ள்.] நல்லொழுக்கமில்லாதவன் என்னசொன்னாலும் அவன்மனம் நோகாமல் காலமு மிடமுமறிந்து பேசி நீங்கிப்போகிறவனே உத்தமன்-என்றவாறு. [௬௪]

சிற்றுணர்வோரொன்றுஞ் சிலுசிலுப்பரான்றமைந்த
முற்றுணர்வோரொன்று மொழியாரோ-வெற்றிபெறும்
வெண்கலத்தினோசை மிகுமேவிரிபசும்பொ
னொண்கலத்திலுண்டோ வொலி.

[இ-ள்.] சிற்றறிவுடையவர்கள் படபடத்தே பேசுவார்கள், பேரறிவுடையவர்கள் அப்படிப்பேசார்கள். (அதெப்படியெனில்) வெண்கலப்பாத்திரத்தில் ஓசையுண்டாம், பொன்பாத்திரத்தில் ஓசையுண்டாகாது அதுபோல என்றவாறு. (௬௫)

உள்ளபொழுதேது முவந்தளிப்பதல்லாலோ
ரெள்ளளவுமீய விசையுமோ - தெள்ளுதமிழ்ச்
சீரளித்தோனுண்டநாட் சேர்மேகத்துக்கருந்த
நீரளித்ததோமுந்நீர் நின்று.

(இ-ள்.) பொருளுள்ளகாலத்தில் அடுத்தவர்களுக்கு எவ்வளவாகிலுங் கொடுக்கக்கூடுமே யல்லாமல் பொருளில்லாதகாலத்தில் கொடுக்கக்கூடாது (அஃதெப்படியெனில்) அகத்தியமகாமுனிவ னுண்டுவிட்டகாலத்தில் சமுத்திரமானது மேகத்துக்கு ஜலத்தைக்கொடுத்ததுண்டோ அதுபோல-எ-று. ()

பேதையரைக்கண்டால் பெரியோர்வழிவிலகி
நீதியொடுபோத னெறியன்றோ - காதுமத
மாகரத்தயானை வழிவிலகல்புன்மலந்தின்
சூகரத்துக்கஞ்சியோ சொல்.

(இ-ள்.) மூடர்களைப் பெரியோர்கண்டால் விலகிப்போவதேநல்லநெறி அஃதேனெனில்) மலத்தைப்புசிக்கும்பன்றியைக்கண்டால்யானைவிலகிப்போவது அதற்குப்பயந்தன்று-எ-று. [௬௭]

மந்திரமுந்தேவு மருந்துங்குருவருளுந்
தந்திரமுஞானந் தருமுறையும்-யந்திரமு
மெய்யென்னில்மெய்யாய் விளங்குமேமேதினியில்
பொய்யென்னிற்பொய்யாகிப் போம்.

(இ-ள்.) மந்திரம் தெய்வம் மருந்து ஆசாரியரருளிச்செய்யும் ஆகமசாத்திரங்கள் அவற்றுள் சொல்லுகின்ற ஞானநெறி சிதம்பரசக்கரமுதலாகிய யந்திரங்கள் இவையெல்லா மெய்யென்று நம்புகிறவர்களுக்கு மெய்யாகவிளங்கும் பொய்யென்று நினைப்பவர்களுக்குப் பொய்யாய்விடும்-எ-று. (௫௮)

ஈசனெதிர்நின்றாலு மீசனருள்பெற்றுயர்ந்த
நேசரெதிர்நிற்ப தரிதாமே-தேசுவளர்
செங்கதிர்முன்னின்றாலுஞ் செங்கதிரவன்கிரணந்
தங்குமணனிற்கரிதே தான்.

(இ-ள்) பரமேஸ்வரரைப் பகைத்தாலும் பகைக்கலாம்-அவரருள்பெற்ற அடியார்களைப் பகைக்கலாகாது (அஃதெப்படியெனில்)சூரியனுக்கெதிரில் நின்றாலும் நிற்கலாம் - அவனது கிரணந்தோய்ந்து வெப்பமுற்ற மணலில் நிற்கக்கூடாது, அதுபோல-எ-று. (௫௯)

முற்றுமிறைசெயலே முற்றிடினுந்தன்னருளைப்
பெற்றவர்தம்பாலே பெரிதாகும்-பற்றுபெருந்
தாபத்திடத்தே தழன்றிடினுநற்சோதி
தீபத்திடத்தே சிறப்பு.

(இ-ள்.)பரமேஸ்வரருடையசெயலெவ்விடத்திலும்பொருந்தியிருக்கினும் அவரது திருவருளைப்பெற்ற தொண்டர்களிடத்தே மிகுதியாய் விளங்கும் (அதெப்படியெனில்) சோதியானது காட்டுத்தீயினிடத்து மிகுதியாக விளங்கினாலுஞ் சிறப்பில்லை - தீபத்தினிடத்திலே சிறிதாக விளங்கினாலுஞ் சிறப்புற்றிருக்கும் அதுபோல-எ-று. (௬௰)

கன்னியரைப்பொன்னாண் கழிந்தோரைமற்றயலார்
பன்னியரைமாயப் பரத்தையரை-முன்னரிய
தாதியரைநல்லோர் தழுவநினையார்நரகத்
தீதுவருமென்றே தெரிந்து.

(இ-ள்.) கன்னியர்கள் கைம்பெண்கள் பிறர்மனைவியர்கள் வேசிகள் தாசிகள் என்னும் இவர்களைப்புணர்ந்தால் நரகவேதனை சம்பவிக்குமென்று நல்லோர்கள்புணர மனதிலும் நினையார்கள்-எ-று. (௬௧)

தன்னையளித்தா டமையன்மனைகுருவின்
பன்னியரசன் பயிறேவி - தன்மனையைப்
பெற்ருளிவளைவர் பேசிலெவருக்கும்
நற்ருயரென்றே நவில்.

(இ-ள்.) தன்னைப் பெற்றவள் தமையன் மனைவி குருபத்தினி அரசன் மனைவி தன் மனைவியைப் பெற்றவள் என்னும் இவளைவர்களுந்தாய்மார்களாம்-எ-று. (சஉ)

வாவியுறைநீரும் வடநிழலும்பாவகமும்
ஏவனையகண்ணு ரிளமுலையு-மோவியமே
மென்சீதகாலத்து வெம்மைதரும்வெம்மைதனி
லின்பாருஞ்சீதள மாமே.

(இ-ள்.) தடாகத்துநீரும் ஆலமரத்துநிழலும் பாவுகல்போட்ட வீடும் ஸ்திரீகளுடைய ஸ்தனங்களும்சீதளகாலத்திலே வெப்பமாயிருக்கும்வேனிற்காலத்திலே குளிர்ச்சியாயிருக்கும்-எ-று. (சந)

உற்றதொழில்செய்வோர்க் குறுபஞ்ச மில்லையாம்
பற்றுசெபத்தோர்க்கில்லை பாவங்கள்-முற்று
மவுனத்தோர்க்கில்லை வருகலகந்துஞ்சாப்
பவனத்தோர்க்கில்லை பயம்.

(இ-ள்.) தத்தமக்குரியதொழில் செய்கிறவர்களுக்கு வறுமையில்லைகாலந்தப்பாமல் செபஞ்செய்கிறவர்களுக்குப் பாவமில்லை மவுனமாயிருப்பவர்களுக்குச் சண்டையில்லை தேவர்களுக்குப்பயமில்லை-எ-று- (சச)

ஆபத்துவந்தா லரும்பொருடான்வேண்டுமே
ஆபத்தேன்பூமா தருகிருந்தா-லாபத்து
வந்தாலவளு மருவாமலெப்பொருளு
மந்தோவுடன்போ மறி.

(இ-ள்.) ஆபத்துவந்தாலதை நீக்கிக்கொள்ளும் பொருட்டுத் திரவியம்வேண்டு திருமகள்கடாக்ஷமிருந்தால் ஆபத்து ஏன்வருமென்றால் ஆபத்து வரும்போது இலட்சுமிகடாக்ஷம் போய்விடும் அதுபோய்விட்டால் பொருள்களும்போய்விடும்-எ-று. (சரு)

இன்னறரும்பொருளை யீட்டுதலுந் துன்பமே
பின்னைதன்னைப்பேணுதலுந் துன்பமே-யன்ன

தழித்தலுந்துன்பமே யந்தோபிறர்பா
லிழத்தலுந்துன்பமே யாம்.

[இ - ள்.] பொருளைச் சம்பாதித்தலுந் துன்பம் பின்பு அதைப்பாது..தலுந் துன்பம்-அதைச் செலவிடுதலுந் துன்பம்-அதை யிழந்துவிடுதலுந்துன்பம்-எ-று. கேசவலுநாயுடு [௪௬]

தானேபுரிவினையாற் சாருமிருபயனுந்
தானேயனுபவித்த றப்பாது-தானூறு
கோடிகற்பஞ்சென்றாலுங்கோதையீர்செய்தவினை
நாடிநிற்குமென்றோர் நயந்து.

[இ - ள்,] ஒருவன்செய்த நல்வினை தீவினையால் வருகிற பாவபுண்ணியங்கள் அனேககற்பகாலங்கள் சென்றாலும் அவனனுபவிக்கும் படியே வந்துசாரும்-எ-று. [௪௭]

தூயவறிவினர்முன்சூழ் துன்பமில்லையாங்
காயும்விடங்கருடற் கில்லையா - மாயுங்கால்
பன்முகஞ்சேர்தீமுன் பயில்சீதமில்லையாந்
துன்முகருக்குண்டோ சுகம்,

[இ - ள்.] கருடனிடத்து விஷஞ்சேராது (அதுபோல) அறிவுள்ளவனிடத்துத் துன்பஞ்சேராது தீயினிடத்துக் குளிர்ச்சிசேராது (அதுபோல) துர்ச்சனர்களிடத்துச் சுகஞ்சேராது-எ-று. [௪௮]

தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கலெனுமிவரோ
டின்புறத்தானுண்டலி னிதாமே-அன்புறவே
தக்கவரையின்றித்தனித்துண்ணலுன்கவர்மீன்
கொக்கருந்தலென்றே குறி.

[இ-ள்.] பிதிர்கள் தெய்வங்கள் விருந்தினர்கள் சுற்றத்தாரென்னு மிவர்களோடுதானுமுண்ணுதலின்பமாம், அப்படியின்றித் தான்மாத்திரந் தனித்துண்ணல் கொக்கானது குளக் கரையில் தனித்திருந்து மீனைத்தின்பதையொக்கும்-எ-று. [௪௯]

இந்திரவிநீள்கிரண மெங்குநிறைந்தாலு
மிந்திரவிகாந்தத் திலகுமே-யிந்திரவி
நேத்திரத்தோனெங்கு நிறைந்தாலுமித்தனருள்
நேத்திரத்தோர்பாலே நிறைவு.

[இ - ள்.] சந்திரசூரியருடைய கிரணங்கள் எங்கும் நிறைவாயிருந்தாலும் சந்திரகாந்தக்கல்லிலுஞ்சூரியகாந்தக்கல்லிலுமே அதிகபிரகாசமாயிருக்கும் [அதுபோலப்] பரமசிவன் எங்கும் நிறைந்தாலும் மெய்ஞ்ஞானிகளிடத்தே பரிபூரணமாயிருப்பார்-எ-று. [௫0]

தாமோதரன்முதலோர்சாதலுஞ்சாற்றுவதும்
பூமேலோர்பொன்றுவதுங் கண்டோமே-நாமுடலை
நேசிப்பதென்னோ நிலையாகுஞ்சங்கரனைப்
பூசிப்பதென்றே புகல்.

[இ - ள்.] திருமால்முதலிய தேவர்கள் இறப்பதை நூல்களிற் சொல்லுவதையும் இவ்வுலகத்தார் இறத்தலையும நாம்அறிந்தோம் ஆகையால் மனமே யாக்கை நிலையான தென்று விரும்புவது எப்படி பரமசிவனைப் பூசிப்பதே நிலையாகும்-எ-று. [௫க]

அரசிலையதி னக்கிரத்தினின்று
வினையவிழுதுளியே போலும்-புரையுடைய
வாக்கைவிடாமுன்ன மரன்பாதம்பூசிக்க
நோக்கனன்றென்றே நுவல்.

[இ-ள்.] அரசிலைநுனியினின்றும் விழுகிறநீர்த்துளிபோல் அடிக்கடியிறந்து பிறக்குந்தன்மையுடைய இந்தச்சரீரத்தைவிட்டு உயிர்நீங்குவதற்குமுன்னே பரமசிவனைப்பூசிக்கநினைப்பது நன்மையாம்-எ-று. [௫உ]

சத்தியத்தைவெல்லாத சத்தியந்தானீள்பொறையை
மெத்தியேகோபமது வெல்லாது-பத்திமிகு
புண்ணியத்தைப்பாவமது வெல்லாதுபோரரக்கர்
கண்ணனைத்தான்வெல்லுவரோ காண்.

[இ-ள்.] மெய்மைப் பொய்வெல்லாது, பொறுமையைக் கோபம்வெல்லாது, புண்ணியத்தைப் பாவம்வெல்லாது (அதெப்படிஎனில்) திருமாலைஅசுரர்கள்வெல்லுவார்களோ வெல்லார்கள் அதுபோல-எ-று. [௫௩]

பொற்பறிவில்லாதபல புத்திரரைப்பெற்றதிலோர்
நற்புதல்வனைப்பெறுத லன்றாமே-பொற்கொடியே
பன்றிபலகுட்டி பயந்ததினாலேதுபய
னென்றமையாதோகரிக்கென் றோது.

(இ-ள்.) நல்லறிவில்லாத பலபிள்ளைகளைப்பெறுவதினும் நல்லறிவுள்ள ஒருபிள்ளையைப்பெறுதல் நன்றாகும் ஒருபன்றி பலகுட்டிகளை யீன்றதனால் என்ன பயன், யானை ஒருகன்றையீன்றாலும் பயனுண்டு-எ-று. (௫௪)

அத்திமலரு மருங்காக்கைவெள்ளைநிறமும்
கத்துபுனன்மீன்பதமுங் கண்டாலும்-பித்தரே
காணார்தெரியற் கடவுளருங்காண்பாரோ
மானார்விழியார் மனம்.

(இ-ள்) அத்திப்பூவையும் வெள்ளைக்காக்கையையும் மீன்காலையும் கண்டாலுங்காணலாம்-ஸ்திரீகளுடைய மனதைத் தேவர்களாலுங் காணக்கூடாது-என்றவாறு. (௫௫)

காளவிடப்பாந்தள் கருடனையுங்கட்டுமோ
வாளெரியைக்கட்டுமோ வன்கயிறு-நீளும்
பவமருளும்பாசம்வெம் பஞ்சேந்திரியம்
சிவயோகியைப்பிணி யாவே.

(இ-ள்.) பாம்பானது கருடனைக்கட்டாது, கயிறானது அக்கினியைக்கட்டாது, (அதுபோலப்) பாசமும் ஐம்பொறிகளும் சிவயோகியைப்பற்றாவாம், என்றவாறு. (௫௬)

புத்தியொடுமுத்திதரும் புண்ணியத்தாலன்றியே
மத்தமிகுபாவத்தால் வாழ்வாமோ-வித்துபயிர்
தாயாகியேவளர்க்குந் தண்புனலாலல்லாது
தீயால்வளருமோ செப்பு.

(இ-ள்.) ஞானத்தையும் மோட்சத்தையுந் தருகின்ற புண்ணியத்தாலல்லாமல் பாவத்தினால் வாழ்வுண்டாகாது (அதெப்படியெனில்) பயிரானது ஜலத்தினாலல்லாமல் தீயினால்வளராது, அதுபோல-எ-று. (௫௭)

சிவனேசிவனே சிவனேயென்பார்பின்
சிவனுமையாளோடுந் திரிவன்-சிவனருளாற்
பெற்றவிளங்கன்றைப் பிரியாமற்பின்னோடிச்
சுற்றுபசுபோற் றொடர்ந்து.

(இ-ள்) தான்பெற்றகன்றின்பின்திரிகின்றபசுவைப்போலப்பரமேசுவரர் தமது திருநாமத்தைப் பலதரஞ்செபிக்கின்ற அடியார்களைவிட்டுநீங்காமல் பார்வதியாருடன் அவர்கள்பின்திரிவார்-எ-று. (௫௮)

தாமுங்கொடார்கொடுப்பார் தம்மையுமீயாதவகை
சேமஞ்செய்வாருஞ் சிலருண்டே-யேமநிழ
லிட்டுமலர்காய்கனிக ளீந்தருளுமாமரத்தைக்
கட்டுமுடைமுள்ளெனவே காண்.

(இ-ள்) காய்கனிகளைக்கொடுக்கின்ற மாமரத்தைச்சுற்றிக்கொண்டு பிறருக்கு உதவவொட்டாமல் செய்கிறமுள்ளைப்போலலோபிகள் தாங்களுங்கொடார்கள் கொடுப்பவர்களையுங் கொடுக்கவொட்டாமல் தடுப்பார்கள்-எ-று. ()

ஆயுமலர்த்தேன்வண் டருந்துவதுபோலிரப்போ
ரீயுமவர்வருந்தா தேற்றலறம்-தூயவிளம்
பச்சிலையைக்கீடமறப் பற்றியரிப்பதுபோ
லச்சமுறவாங்க லகம்.

(இ-ள்.) மலர்கள் நலியாமல் வண்டுகள் தேனை யுண்பதுபோல் இரப்பவர்கள் கொடுப்போர் மனம் வருந்தாமல் வாங்குவதே தருமம் புழுவானதுபச்சிலையைஅரிப்பதுபோலக் கொடுப்பவனைவருத்தப்படுத்தி வாங்குவது பாவமாம்-எ-று. (௬௰)

மாதாமரிக்கின் மகனுவினற்சுவைபோந்
தாதாவெனிற்கல்வி தானகலு-மோதினுடன்
வந்தோன்மரித்துவிடில் வாகுவலிபோமனையே
லந்தோவிவையாவும் போம்.

(இ - ள்) ஒருவனுக்குத்தாயிறந்தால் நாவினுக்கினிய சுவைபோய்விடும் தகப்பனிறந்தால் கல்விபோய்விடும், சகோதரன்இறந்தால் புஜபலம்போய்விடும், மனைவியிறந்தால் இவையெல்லாம்போய்விடும்-எ-று. [௬௧]

ஓதுபொருள்கண்டோர்க் குறுமாசைநீதியிலாப்
பாதகனைக்கண்டோர்க்குப் பாவமாம்-சீதமலர்
கண்டோர்க்குறும்பாசங் கற்றமைந்தநற்றவனைக்
கண்டோர்க்குடனுங்கதி.

(இ-ள்.) திரவியத்தைக்கண்டவர்களுக்கு ஆசையுண்டாவதுபோலப்பாவிகளைக்கண்டவர்களுக்குப் பாவமுண்டாகும், புஷ்பங்களைக் கண்டவர்களுக்குவிருப்பமுண்டாவதுபோலமெய்ஞ்ஞானியைக்கண்டவர்களுக்கு மோக்ஷமுண்டாகும்-எ-று. (௬௨)

பாவிதனந்தண்டிப்போர் பாலாகுமல்லதருள்
மேவுசிவனன்பர்பான் மேவாதே-யோவியமே
நாயின்பாலத்தனையு நாய்தனக்காமன்றியே
தூயவருக்காகுமோசொல்.

(இ-ள்.) பாவிகள்தேடும்பொருள் தண்டிப்பவர்களுக்கு உதவுமேயல்லாமல் சிவனடியார்களுக்குதவாது (அதெப்படியெனில்) நாயின்பால் நாய்க்குட்டிக்கு உதவுமேயன்றிச் சான்றோருக்குதவாது அதுபோல-எ-று. (௬௩)

பொன்னுங்கரும்பும் புகழ்பாலுஞ்சந்தனமுஞ்
சின்னம்படவருத்தஞ் செய்தாலு-முன்னிருந்த
நற்குணமேதோன்று நலிந்தாலுமுத்தமர்பால்
நற்குணமேதோன்று நயந்து.

(இ-ள்.) பொன்னைச்சுட்டாலும் கரும்பைஆலையாடினாலும் பாலைக்காய்ச்சினாலும் சந்தனத்தைத்தேய்த்தாலும் அதன்குணங்கெடாது (அதுபோல) வறுமைமுதலியவற்றால் நல்லோர்மனம் வருந்தினாலும் அவர்களது சற்குணங்கெடாது-எ-று. (௬௪)

வேசியரும்நாயும் விதிநூல்வயித்தியரும்
பூசுரருங்கோழிகளும் பொன்னனையீர்-பேசிலொரு
காரணந்தானின்றியே கண்டவுடனேபகைபாங்
காரணந்தானப்பிறப்பே காண்.

(இ-ள்) விலைமாதர்களை விலைமாதர்களும், நாய்களைநாய்களும், வயித்தியரை வயித்தியரும், பிராமணர்களைப் பிராமணர்களும், கோழிகளைக்கோழிகளுங்கண்டால் யாதொருகாரணமும் இல்லாமல் பகையுண்டாகும் யோசிக்குமிடத்துப் பிறப்பேகாரணமாயிருக்கின்றது-எ-று. (௬௫)

அன்னமனையீர்குயிலுக் கானவழகின்னிசையே
கன்னன்மொழியார்க்கழகு கற்பாமே-மன்னுகலை
கற்றோர்க்கழகு கருணையேயாசையறக்
கற்றோர்க்கழகு பொறையாம்.

(இ-ள்.) குயிலுக்கழகாவது இன்னோசை (அதுபோல) ஸ்திரீகளுக்குஅழகாவதுகற்பு கற்றுணர்ந்தவர்களுக்கு அழகாவது கிருபை-அதுபோல-ஆசையற்றவர்களுக்கு அழகாவதுபொறுமை-எ-று. (௬௬)

இதமகிதவார்த்தை யெவர்க்கேனுமேலா
மிதமெனவேகூற லிதமன்றே-யிதமுரைத்த
வாக்கினலேரண்ட மாமுனியுஞ்சோழனெடு
தேக்குநீர்வீழ்ந்தொழிந்தான் சேர்ந்து.

(இ-ள்.) இதம் அகிதமாகிய வார்த்தைகளை எவருக்காவது சொல்லுவது நன்மையெனக்கருதிச் சொல்லலாகாது (ஏனெனில்) ஏரண்டமாமுனிவர்சோழராஜனுக்கு இதமான வசனத்தைச்சொல்லி அந்தராஜனேடு தானுமிறந்தார்-எ-று, (வரலாறு) முற்காலத்தில் ஒருநாள் காவிரியின்வெள்ளமானது திருவலஞ்சுழியென்னுந் தலத்துக்குச் சமீபத்தில்வரும்போது சுழித்துக்கொண்டு பூமிக்குள் போய்விட சோழராஜன் அதைக்கண்டு துயரமுற்று ஏரண்டமாமுனிவரை வணங்கி இந்தச் சேதியைச்சொல்ல அந்தச்சுழியில் ஒரு முடித்தலையையாவது சடைத்தலையையாவது கொடுத்தால் பிரவாகம் உள்ளிறங்காமல் பெருகுமென்று சொல்ல அதைக்கேட்டராஜன் தேசஞ்செழித் திருக்க வேண்டுமென்கிற கருணையால் அந்தச்சுழியில்விழுந்துவிட்டான் அதைப்பார்த்திருந்தமுனிவர் நம்மாலல்லவோ அரசன்இறந்துவிட்டானென்று தாமும் அந்தச்சுழியில்விழுந்து இறந்தார். (கூஎ)

இத்தரையோர்தம்மி லிருவரேமேலானேர்
சித்துரசவாதி சிவயோகி-முத்தனையீர்
நல்குரவுமுற்பவமு நாசம்புரிவரோ
யல்லவரோவீரியக் கீடம்.

(இ-ள்.) மானுடரில் ரசவாதியும் சிவயோகியுமே மேலானவர்கள் (ஏனெனில்) ரசவாதிக்குத் தரித்திரமில்லை சிவயோகிக்குப் பிறவியில்லை மற்றவர்களோவென்றால் புழுக்களை ஒப்பாவார்கள்-எ-று. (கூஅ)

அற்றசிவயோகிக்கருஞ்சின்னமூன்றுண்டு
பற்றலகையுன்மத்தம் பாலரியல்-முற்றுரச
வாதிக்குச்சின்னமூன் றுண்டேமகிழ்போக
மீதலிரவாமை யென்று.

(இ-ள்.) சிவயோகிக்கு மூன்றடையாளமுண்டு (அவையாவையெனில்) அகப்பற்று புறப்பற்றின்றிப்பேய்பிடித்ததுபோலவும், உன்மத்தம்மேலிட்டதுபோலவும் பாலர்போலவும் இருத்தலாம், இரசவாதிக்கு மூன்றடையாளமுண்டு (அவையாவையெனில்) செல்வமனுபவித்தலும், இரப்பவர்க்குக்கொடுத்தலும், தான் ஒருவரிடத்திற்போய் இரவாமையுமாம்-எ-று. [கூகூ]

வல்லவர்பாற்கல்வி மதமாணவம்போக்கும்
அல்லவர்பாற்கல்வி யவையாக்கும்-நல்லிடத்தில்
யோகம்பயில்வா ருயர்தோரிழிந்தோர்கள்
போகம்பயில்வார்புரிந்து.

(இ-ள்.) வல்லவர்கள் கற்ற கல்வியானது செருக்கையும் அகங்காரத்தை யும் நீக்கும், பேதைகள்கற்ற கல்வியானது செருக்கையும் அகங்காரத்தையு முண்டாக்கும், மேலோர்கள் யோகத்தையே விரும்புவார்கள் மூடர்கள் போகத்தையே விரும்புவார்கள்-எ-று. (எ௰)

தீயவர்பாற்கல்வி சிறந்தாலுமற்றவரைத்
தூயவரொன்றெண்ணியே துன்னற்க-சேயிழையே
தன்னொளியமாணிக்கஞ் சர்ப்பந்தரித்தாலு
நன்னுவரோமற்றதனை நாடி.

(இ-ள்.) தீயவர்களிடத்தில் கல்வி அதிகமாயிருந்தாலும் அவர்களை நல்ல வர்களென்றெண்ணிச் சேராதே (ஏனெனில்) பாம்பினிடத்தில் மாணிக்கமி ருந்தாலும் அதினிடத்தில் சேர்வார்களோ-எ-று. (எக

ஊருரொனும்வனத்தே யொள்வாட்கண்மாதரெனும்
கூருர்விடமுட் குழாமுண்டே-சீருர்
விரத்திவயிராக்ய விவேகத்தொடுதோ
லுரத்தணியத்தையாவென் றேது.

(இ-ள்.) ஊராகிய வனத்திலே ஸ்திரீகளாகியமுள்ளுகளுண்டு துறவிக ள் வயிராக்கியந்தங்கிய விவேகமென்னும் பாதரட்சையை அறிவென்னுங்கா லில்தரித்தால் அந்தமுள்ளுகள் தையாவாம்-எ-று. (எஉ)

போற்றுகுருகிளையும் பொன்னாசையோர்க்கில்லை
தோற்றுபசிக்கில்லை சுவைபாகம்-தேற்றுகவி
நேசற்கிலைசுகமு நித்திரையுங்காமுகர்தம்
ஆ[illegible]கிலைபய மானம்.

(இ-ள்.) பொன்னாசையுற்றவர்களுக்குக்குருவும் சுற்றத்தாருமில்லை மிக் கபசியுள்ளவர்களுக்கு ருசியும் பாகமுமில்லை கவிபாடும் இச்சையுள்ளவர்களு க்குச் சுகமும் நித்திரையுமில்லை பெண்ணாசையுள்ளவர்களுக்குப் பயமும்மா னமுமில்லை-எ-று. (எ௩)

நன்றறியாத்தீயோர்க் கிடங்கொடுத்தநல்லோர்க்குந்
துன்றுகிளைக்குந் துயர்சேரும்-குன்றிடத்திற்
பின்னிரவில்வந்தகரும் பிள்ளைக்கிடங்கொடுத்த
அன்னமுதற்பட்டதுபோலாம்.

(இ-ள்.) காகத்துக்கிடங்கொடுத்த அன்னப்பட்சிக்குத் துயரஞ்சம்பவித்ததுபோல துஷ்டருக்கிடங்கொடுத்த நல்லோர்க்கும் அவர்கள் சுற்றத்தாருக்கும் துயரஞ்சம்பவிக்கும்-எ-று. (வரலாறு) ஒருவராலும் ஏறக்கூடாத பெரியமலைக்குகையில் அன்னப்பட்சிகள் வாசஞ்செய்துகொண்டிருக்கையில் ஒருநாளிராத்திரி ஒருகாக்கையானதுவந்து ஓ! அரசவன்னமே, நான்மழையில் நனைந்து திசைதப்பிவந்தேன் நீ இடங்கொடுத்து ஆதரிக்கவேண்டுமென்று சொல்ல அவ்வரசவன்னம் மந்திரியன்னத்தைப்பார்க்க மந்திரிஅரசனே எந்தப்பட்சிக் கிடங்கொடுத்தாலுங் காக்கைக்குமாத்திரமிடங்கொடுக்க லாகாதென்றுதடுக்க அரசவன்னஞ்சொல்லியது காக்கையினம் உதயகாலத்திலெழுந்திருத்தலும், ஒருவருங்காணுமல் புணர்தலும், அந்தியில்குளித்துச் சேக்கையிற்சேர்தலும், இரையகப்பட்டால் சுற்றத்தோடுண்ணுதலும் உயிரோம்புதலுமாகிய ஐந்துகுணங்களையுடையதாகையால், அதைக்காப்பதே தருமமென்று இடங்கொடுக்கக் காக்கை அன்றிரவிலங்கிருக்கையில் எச்சமிட்டது அவ்வெச்சத்திலிருந்த ஆலம்வித்துமுளைத்துப்பெரியவிருட்சமாகிவிழுதுகளைவிட்டது அவ்விழுதுகளைப்பற்றிக்கொண்டு ஒருவேடன் மலையின்மீதேறிக் கண்ணிவைத்து அன்னங்களையெல்லாம் பிடித்துக்கொண்டுபோனன். (எச)

மனம்வேறுசொல்வேறு மன்னுதொழில்வேறு
வினைவேறுபட்டவர்பால் மேவும்-மனமே
மனமொன்றுசொல்லொன்று வான்பொருளுமொன்றே
கனமொன்று மேலவர்தங்கண்.

(இ - ள்.) துர்ச்சனரிடத்து மனம் வாக்கு செய்கையாகிய இம்மூன்றும் வெவ்வேருயிருக்கும் சற்சனரிடத்து மனம்வாக்கு செய்கையாகிய இம்மூன்றும் ஒன்றுபோலவே யிருக்கும்-எ-று. (எரு)

கண்ணுக்கினிய சபைக்குமணிகற்ருேரோ
விண்ணுக்கினியமணி வெய்யோனே-வண்ணநறுஞ்

சந்தமுலையார் சயனத்தினியமணி
மைந்தன்மனைக்கு மணி.

(இ - ள்.) சபைக்குரத்தினம் கற்றவர்கள் ஆகாயத்துக்கு ரத்தினம் சூரியன் - சயனத்துக்கு ரத்தினம் ஸ்திரீகள் மனைக்குரத்தினம் புத்திரர்கள்-என்றவாறு. (எசு)

பாலினீர்தீபணுகப் பால்வெகுண்டுதீப்புகுந்து
மேலுநீர்கண்டமையு மேன்மைபோல்-நூலினெறி
யுற்றோரிடுக்க ணுயிர்கொடுத்துமாற்றுவரோ
மற்றோர்புகலமதித்து.

(இ-ள்.) பாலானது தன்னைச்சேர்ந்தநீரைத் தீயானது சுண்டச்செயக்கண்டு பொறுதுபொங்கித்தீயையவித்துப் பின்னும் நீரிலுலடங்கும் [அதுபோலப்] பெரியோர்களும் தங்களையடுத்தவர்களுக்குத் துயரம்வந்தால் தங்களுயிரையாவது கொடுத்துக்காப்பாற்றுவார்கள்-எ-று. (எஎ)

அந்தோபுரமெரித்த வண்ணலடியார்பொருள்கள்
செந்தீயினுங்கொடிய தீகண்டாய்-செந்தீயை
நீங்கிற்சுடாதே நெடுந்தூரம்போனாலும்
ஏங்கச்சுடுமோ யிது.

(இ-ள்.) பரமசிவனுடைய அடியார்பொருள் தீயினுங்கொடியதாகும், [ஏனெனில்] தன்னைவிட்டுநீங்கினபேரைத்தீயானது சுடாது அப்பொருளானது தன்னைக் கவர்ந்தவர்கள் எங்கேபோனாலும் சுடும்-எ-று. (எஅ)

நிந்தையிலாத்தூயவரும் நிந்தையரைச்சேரிலவர்
நிந்தையதுதம்மிடத்தே நிற்குமே-நிந்தைமிகு
தாலநிழற்கீழிருந்தான் றன்பாலருந்திடினும்
பாலதெனச்சொல்லுவரோ பார்.

(இ-ள்.) குற்றமற்ற மேலோர்களானாலும்குற்றமுள்ளகீழோரைச்சேர்ந்தால் குற்றமே சாரும் [அதெப்படியெனில்] பனைமரத்தின்கீழிருந்து பசுவின்பாலைக்குடித்தாலும் பாலென்றுசொல்லார்கள்-எ-று. (எகூ)

கன்மமேபூரித்த காயத்தோர் தன்செவியில்
தன்மநூல்புக்காலுந் தக்காதே-சன்மமெலும்

புண்டுசமிக்குநாயுங் ஞவினெய்யதனை
யுண்டுசமிக்குமோ வோது.

(இ-ள்.) பாவிகளுடையசெவியில் தருமசாஸ்திரத்தைப்போதித்தால் தங்காது [அதெப்படியெனில்] தோலேயும் எலும்பையுந்தின்னும் நாய் பசுவின்நெய்யை யுண்ணுது அதுபோல-எ-று. (அ௰)

பெண்ணுதவுங்காலே பிதாவிரும்பும்வித்தையே
யெண்ணிறனம்விரும்பு மீன்றதாய்-நண்ணிடையிற்
கூரியநற்சுற்றங் குலம்விரும்புங்காந்தனது
பேரழகுதான்விரும்பும் பெண்.

(இ-ள்.) தகப்பன் தன்பெண்ணைக் கல்விகற்றவனுக்குக் கொடுக்கவிரும்புவான், தாய்திரவியமுள்ளவனுக்குக்கொடுக்க விரும்புவாள், சுற்றத்தார் நற்குலத்தைவிரும்புவார்கள் பெண் அழகுள்ளவனையே விரும்புவாள்-எ-று. (அக)

காந்துநறும்புன்னை கலந்துவிரும்புமே
வேந்தர்தனமே விரும்புவார்-சாந்தநூல்
கல்லார்பகைசோ கலகம்விரும்புவார்
நல்லார்விரும்புவார் நட்பு.

(இ-ள்.) வண்டானது புன்னைமலரையும்விரும்பும், வேந்தர்கள்பொருளையே விரும்புவார்கள், கல்லாதமூடர்கள் கலகத்தையேவிரும்புவார்கள்,நல்லோர்கள் நட்பையேவிரும்புவார்கள்-எ-று. (அஉ)

கற்றைக்குழலார் கவினெல்லாமோர்மகவைப்
பெற்றபொழுதே பிரியுமே-கற்றருளை
வேட்டபெரியோர் பெருமையெல்லாம்வேறொன்றைக்
கேட்டபொழுதே கெடும்.

(இ-ள்.) ஒருகுழந்தையைப் பெற்றவுடன் ஸ்திரீகளுடைய அழகெல்லாம் போய்விடும் அதுபோலத் திருவருளை விரும்பியபெரியோர்கள் மற்றொருவிடயத்தை விரும்பினல் அத்திருவருள் அவர்களைவிட்டுப்போய்விடும்-எ-று

சீலங்குலமடியா ளண்டிற்கெடுங்கணிகை
யாலிங்கனந்தனநா சம்மாகும்-நூலிழந்த
வல்லிதழுவக்குறையும் வாழ்நாள்பிறர்மனையைப்
புல்லினர்க்கெல்லாநலமும் போம்.

(இ-ள்.) அடியாளைப் புணர்ந்தால் ஒழுக்கமுங் குலமுங்கெடும் வேசியைப்புணர்ந்தால் திரவியநாசமாகும் கைம்பெண்ணைப்புணர்ந்தால் ஆயுள்குறையும் பிறர்மனையைப்புணர்ந்தால் எல்லாநலமும்போய்விடும் எ-று. (௮௪)

சத்தியமெக்காலுஞ் சனவிருத்தமாகுமே
யெத்தியபொய்யார்க்கு மிதமாகும்-நத்தியபால்
வீடுதொறுஞ்சென்று விலையாமதுவிருந்த
வீடுதனிலேவிலை யாமே.

(இ-ள்.) சனங்களுக்குச் சத்தியவசனமானது விரோதமாயிருக்கும் அசத்தியவசனமானது இதமாயிருக்கும் (அதெஃப்படியெனில்) பாலானது வீடுகள்தோறுஞ் சென்றுவிற்றால் விலையாகும் கள்ளானது யாவருந்தேடிவந்து வாங்கும்படி இருப்பிடத்தில் விலையாகும் அதுபோல-எ-று. (௮௫)

நல்லொழுக்கமில்லாரிடஞ் சேர்ந்தநல்லோர்க்கு
நல்லொழுக்கமில்லாச்சொ னண்ணுமே-சொல்லும்விடப்
பாம்பெனவுன்னுரோ பழுதையேயானாலுந்
தூம்பமருட்புற்றடுத்தாற் சொல்.

(இ-ள்) துர்ச்சனரைச்சேர்ந்த சற்சனரையும் துர்ச்சனரொன்றே நினைப்பார்கள் (அஃதெப்படியெனில்) பழுதையானது புற்றருகிருந்தால் பாம்பென்றே நினைக்கப்படும்-அதுபோல எ-று. (௮௬)

வாக்குநயத்தாலன்றிக் கற்றவரைநற்றவரை
யாக்கைநயத்தா லறியலாகாதே-காக்கையொடு
நீலச்சிறுகுயிலை நீடிசையாலன்றியே
கோலத்தறிவாரோ கூறு.

(இ-ள்.) கற்றுணர்ந்தவர்களையும் சிவயோகிகளையும் அவர்கள்வசனிக்கும் இனியவசனத்தால் அறியலாமேயன்றி உருவத்தாலறியலாகாது (அதெஃப்படியெனில்) காகத்தையுங் குயிலையும் ஓசையாலறியலாமேயன்றி யுருவத்தாலறியலாகாது அதுபோல எ-று. (௮௭)

ஆசைபெனும்பாசத்தா லாடவர்தஞ்சிந்தைதனை
வீசுமனையாந்தறியில் வீழ்த்தியே-மாசுபுரி
மாயாமனைவியரா மக்கண்மகவென்னு
நாயாற்கடிப்பித்த ஞடு.

(இ - ள்.) புருஷர்களுடைய மனதை ஆசையாகிய கயிற்றாற்கட்டிமனைவிமக்களாகிய நாயாற் கடிப்பித்தலை ஆராய்ந்துபார்-எ-று. (௮௮)

தானறிந்தோருக்குதவி தன்னாலமையுமெனில்
தானுவந்தீத றலையாமே-யானதனால்
சொன்னாற்புரிதலிடை சொல்லியும்பன்னாண்மறுத்துப்
பின்னாட்புரிவதுவே பின்.

(இ - ள்.) ஒருவன் குறிப்பறிந்து கொடுப்பது உத்தமம் கேட்டபின் கொடுப்பது மத்திமம் பலநாள் திரியச் செய்து கொடுப்பது அதமம் என்றவாறு. (௮௯)

உற்றமறையகத்தி லுய்க்குமவனுத்தமனே
மற்றம்மறைபகர்வோன் மத்திமனே-முற்றிழையீர்
அத்தமுறலாற் புகல்வானதமனென
வித்தகநூலோதும் விரித்து.

(இ - ள்.) ஏதாவதொரு ரகசியத்தை வெளியிடாமல் மறைக்கின்றவன் உத்தமன் யாவரோடுஞ் சொல்லுகிறவன் மத்திமன் திரவியம் வாங்கிக்கொண்டு சொல்லுகிறவன் அதமன் எ-று. (௯௰)

உத்தமர்தாமீயுமிடத் தோங்குபனைபோல்வரே
மத்திமர்தாந்தெங்குதனைமானுவரே-முத்தலரு
மாங்கமுகுபோல்வாரத மரவர்களே
தேங்கதலியும்போல்வார் தேர்ந்து.

(இ - ள்.) கொடுக்குந்தன்மையில் உத்தமர்பனைமரத்துக் கொப்பாவர் மத்திமர் தென்னைமரத்துக்கொப்பாவர் அதமர் கமுகமரத்துக்கும் வாழைமரத்துக்கும் ஒப்பாவர். பனைமரம் நீரைவிரும்பாமலே பலனைத்தரும் தென்னைமரம் நீர்விட்டமட்டிலே பலனைத்தரும் கமுகும்-வாழையும் மாறாமல் நீர்விட்டுக்கொண்டிருந்தால் பலனைத்தரும் எ-று. (௯௧)

எல்லோர்தமக்கு மினிதுதவலன்றியே
நல்லோர்தமக்குதவி நாடாரோ-வல்லதரு
நாமநிதிமேக நயந்துதவலன்றியே
தாமுதவிநாடுமோ சாற்று.

(இ - ள்.) நல்லவர்கள் மற்றெல்லாருக்கும் உதவிசெய்கிறதேயல்லாமல் அவர்களால் தங்களுக்கு ஒரு உதவியையும் வேண்டார்கள் (அஃதெப்படியெனில்) கற்பகத்தரு சங்கநிதி பதுமநிதி மேகம் என்னும் இவைகள் பிறருக்கு உதவி செய்யுமேயல்லாமல் அவர்களால் தங்களுக்கு உதவிவேண்டாவாம் அதுபோல எ-று. [௯௨]

வெய்யோன்கிரணமிகச் சுடுமேவெய்யவனில்
செய்பொன்கிரணமிகத் தீதாமே-வெய்யகதிர்
எல்லோன்கிரணத் தெரியினிலுமெண்ணமில்லார்
சொல்லேமிகவுஞ் சுடும்.

[இ - ள்.] சூரியகிரண மிகவுஞ்சுடும் தீயானது அதனிலும் அதிகமாகச் சுடும் மூடர்சொல் அவ்விரண்டிலும் அதிகமாகச்சுடும்-எ-று. [கரு]

திங்களமிர்த கிரணமிகச்சீதளமே
திங்களினுஞ்சந்தனமே சீதளமாய்-இங்கிவற்றின்
அன்பறிவுசாந்த மருளுடையார்நல்வசனம்
இன்பமிகுஞ்சீதள மாமே.

[இ - ள்.] சந்திரகிரணம் மிகவுங்குளிர்ச்சியாயிருக்கும் சந்தனமானது அதைப்பார்க்கிலுங் குளிர்ச்சியாயிருக்கும் நல்லவர்கள்வசனம்அவ்விரண்டைப்பார்க்கிலுங் குளிர்ச்சியாயிருக்கும். எ-று. [கசு]

சீராம்வெண்ணீற்றுத் திரிபுண்டரம்விடுத்தே
பேரானமுத்திபெற விரும்பல்-ஆரமிர்த
சஞ்சீவியைவிடுத்தே சாகாதிருப்பதற்கு
நஞ்சேபுசித்ததுபோ னடு.

[இ - ள்.] விபூதிதரித்துக் கொள்வதைவிட்டு மோட்சம்பெறவிரும்பல் (எப்படியெனில்) இறவாமலிருக்கவிரும்பினவன் அமிர்தசஞ்சீவியைவிட்டுநஞ்சையுண்பதுபோலாம்-எ-று. [கஎ]

செந்தாமரையிரவி சேருதயம்பார்க்குமே
சந்திரோதயம்பார்க்குந் தண்குமுதம்-கந்தமிகும்
பூவலரப்பார்க்கும் பொறிவண்டரன்பர்விடைத்
தேவன்வரல்பார்ப்பார் தெளிந்து.

[இ - ள்.] தாமரையானது சூரியனுதித்தலைவிரும்பும்அல்லியானது சந்திரனுதித்தலைவிரும்பும் வண்டானது பூமலர்தலைவிரும்பும் (அதுபோல) அடியார்கள் பரமசிவன் தரிசனமாவதை விரும்புவார்கள் எ-று. [கஅ]

வில்லமறுகுக்கொவ்வா மென்மலர்களுல்வரொனு
நல்லவன்பர்சொற்கொவ்வா நான்மறைகள்-மெல்லிநல்லாய்
ஆமந்திரமெவையு மைந்தெழுத்தையொவ்வாவே
சோமசுந்தரற்கென்றே சொல்.

[இ - ள்.] பரமசிவனுக்கு எல்லாவிதமலர்களும் வில்வத்தையும் அறுகை யும் ஒப்பாகா நாலுவேதங்களும் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருநாவுக்கரசுசுவாமிகள் சுந்தரமூர்த்திசுவாமிகள் மாணிக்கவாசகசுவாமிகள்என்னு மிந்நால்வர்அருளிச்செய்ததேவாரத்திருவாசகங்கட்கொப்பாகாமந்திரங்களெல்லாம் ஸ்ரீ பஞ்சாட்சரத்துக்கொப்பாகா என்றவாறு. [கூஎ]

கல்லார்பலர்கூடிக் காதலித்துவாழ்கினுநூல்
வல்லானொருவனையே மானுவரோ-அல்லாரும்
எண்ணிலாவான்மீனி லகிடினும்வானகத்தோர்
வெண்ணிலாவாமோ விளம்பு.

[இ - ள்.] கல்லாதவர்கள் பலராக இருப்பினும் கற்றஒருவனுக்கு ஒப்பாகார்கள்[அதெங்ஙப்படியெனில்] நட்சத்திரங்கள் பலவா யிருந்தாலும் சந்திரனுக்கொப்பாகா அதுபோல-எ-று. [கூஅ]

சந்தனத்தைச்சேர்தருவுந் தக்கமணங்கமழுஞ்
சந்தனத்தைச்சார்வேய் தழல்பற்ற-அந்தவனந்
தானுமச்சந்தனமுந் தன்னினமுமாள்வதன்றித்
தானுங்கெடச்சுடுமே தான்.

[இ - ள்.] சந்தனமரத்தைச் சார்ந்தமற்ற மரங்களெல்லாம் சந்தனவாசங்கமழும் ஆனால் மூங்கில்மாத்திரம் அந்தவனம் அதிலுள்ளசந்தனமரங்கள் தன்னினமாகிய மூங்கில்கள் மற்றுந்தான் எல்லாம் வேகும்படிசுடும் [அதுபோல] நல்லவர்களைச் சேர்ந்தவர்களில் சிலர் அவர்களைப்போல நல்லவர்களாவார்கள் சிலர் அந்தநல்லவர்களையு மவர்களைச்சேர்ந்த மற்றவர்களையும் கெடுத்துத்தாங்களுங்கெடுவார்கள்.எ-று. [கூகூ]

கங்கைநதிபாவஞ் சசிதாபங்கற்பகந்தான்
மங்கலுறும்வறுமைமாற்றுமே-துங்கமிகும்
இக்குணமோர்மூன்றும் பெரியோரிடஞ்சேரில்
அக்கணமேபோமென் றறி.

[இ - ள்.] கங்கைநதிபாவத்தைப்போக்கும் சந்திரன்வெப்பத்தைப்போக்கும் கற்பகவிருட்சம் வறுமையைப்போக்கும் பெரியோர்கள் சார்புஇம்மூன்றையும் போக்கிவிடும்-எ-று. [௱]

நீதிவெண்பா-மூலமும்உரையும்

முற்றிற்று.